



சித்தையங்கோட்டை பேரூராட்சி, சேடபட்டியைச் சேர்ந்த த.வெ.க. பா.ஜ.க., அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் 50 பேர் த.வெ.க. கட்சியைச் சேர்ந்த முன்னாள் இளைஞரணி செயலாளர் விவேக் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் பேரூர் கழக செயலாளர் சக்திவேல், பேரூர் கழக செயலாளர் போதும்பொண்ணு முரளி, மாவட்ட பிரதிநிதி சௌந்திரபாண்டியன், முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் தங்கப்பாண்டியன் உட்பட பலர் உள்ளனர்.

### ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியை சேர்ந்த

# த.வெ.க., பா.ஜ.க., அ.தி.மு.க. கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலை!

திண்டுக்கல்,ஜன.12- ஆத்தூர் சட்டமன்ற தொகுதி சித்தையங்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேடபட்டி மற்றும் லட்சுமி புரத்தைச் சேர்ந்த த.வெ.க. பாஜக, அதிமுக கட்சி தொண்டர்கள் 50 பேர் த. வெ.க. கட்சியைச் சேர்ந்த முன்னாள் இளைஞரணி செயலாளர் விவேக் தலைமையில் 50 பேர் திண்டுக்கல் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் மாளிகையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து, தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

கட்சியில் இணைந்தவர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள்,

இன்று பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் கட்சியில் இணைகிறார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம் என்றார்.

நிகழ்ச்சியின்போது தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், நெடுஞ்செழியன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, சித்தையங்கோட்டை பேரூர் கழக செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொன்னு முரளி, முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தங்கப்பாண்டியன் மாவட்ட பிரதிநிதி சௌந்திரபாண்டியன், பேரூராட்சி வார்டு உறுப்பினர் தியாகு (எ) முத்துக்குமார், வார்டு உறுப்பினர் முருகன், இளைஞரணியைச் சேர்ந்த காதர்மைதீன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப், சித்தரேவு பெரோஸ்கான், மற்றும் இளைஞரணியினர் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்!

# 635 பேர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

நெல்லை,ஜன.12- நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் நடைபெற்ற தனியார் வேலை வாய்ப்பு முகாமில்

சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று 635 வேலைநாடுநர் களுக்கு தனியார் நிறுவனங்களில் பணிபுரிவதற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நெல்லை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்,தூய யோவான் கல்லூரி இணைந்து நடத்திய மாபெறும் தனியார் வேலை வாய்ப்பு முகாமில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணிநியமன ஆணைகளை சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், கிறிஸ்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜிலா சத்தியானந்த் ஆகியோர் முன்னிலையில் (10.01.2026) அன்று வழங்கினார்.

பின்னர் சட்டபேரவைத்தலைவர் மு. அப்பாவு தெரிவித்ததாவது.

இந்தியாவில் கல்விக்கு முன்னுரிமை வழங்கும் மாநிலம் தமிழ்நாடு,தனியார் நிறுவனங்களில் அதிக அளவில் பெண்கள் பணிபுரியும் மாநிலங்களில் முதல் மாநிலம் தமிழ்நாடு.பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிலும், வேலைவாய்ப்பு வழங்குவதிலும் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. தமிழ்நாட்டை சேர்ந்த 43 சதவீத பெண்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.தனியார் நிறுவனங்களில் வெளி மாவட்டங் களுக்கு சென்று பெண்கள் பணிபுரிவதற்கு ஏதுவாக தோழி இல்லங்கள் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி அதற்கு தேவையான நிதிகளை ஒதுக்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

ஒருதாய் கருவுற்றது முதல் குழந்தை பிறந்து வீடு செல்லும் வரை தேவையான மருத்துவ ஆலோசனைகள் ஊட்டசத்து பொருட்கள் என அனைத்து உதவிகளும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அதைபோன்று அந்த குழந்தை பள்ளியில் ஆரம்ப கல்வி முதல் உயர் கல்வி வரை கல்வி பயில்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் காலை உணவு, மதிய உணவு போன்றவை வழங்கி வருகிறது. மேலும் உயர்கல்வி பயில்வதற்கு தேவையான கல்வி உபகரணங்கள், மடிக்கணினி, போன்றவை வழங்கி வரு தமிழ்நாட்டில் வேலை நாடுநர்கள் ஒரு புறமும், வேலை வாய்ப்பு வழங்குபவர்கள் ஒரு புறமும் இயங்கி வந்த சுழலை மாற்றி தனியார் வேலைவாய்ப்பு முகாம்களை ஏற்படுத்தி அரசு பாலமாக செயல்பட்டதின் காரணமாக இன்று பல்வேறு தனியார் நிறுவனங்களில் மாணவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் நடைபெற்ற 13 வேலைவாய்ப்பு முகாம்களில் இது வரை சுமார் 9500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக இன்று திருநெல்வேலி கங்கை கொண்டான் சிப்காட்டில் டாடா சோலார்,போன்ற பெறு நிறுவனங்களும் அதை சுற்றி பல்வேறு புதிய நிறு வனங்களும் கொண்டுவரப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் வின் பாஸ்ட் நிறுவனம் கொண்டு வரப்பட்டுள்ளது. தொழில் தொடங்குவதற்கு ஆர்வமும்,சரியான திட்டமிடலும்,புதிய சிந்தனைகளும் இருந்தால் தமிழ்நாடு அரசு அவர்களுக்கு தேவையான அனைத்து வழிகாட்டுதல் வழங்கி தேவையான கடன் உதவிகளும் வழங்குவதற்கு நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகிறது.

சாமனிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக முதலமைச்சர் அவர்கள் "உங்க கனவ சொல்லுங்கள்" திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். உங்களுக்கு உள்ள குறைகளை கேட்பதற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நடைபெற்ற முகாமில் 106 தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டது. 2,339 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர், அவர்களில் 635 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அந்தோனி,ஜெப்ரின்,தூய யோவான் கல்லூரி முதல்வர் சுதாகர் ஐசக், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணைத்தலைவர் க.இசக்கி பாண்டியன்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, அலெக்ஸ் அப்பாவு, தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவன்,உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆலங்குளம் மத்திய ஒன்றியம் வீராணத்தில் திராவிட பொங்கல் விளையாட்டு போட்டியான கைப்பந்து, கிரிக்கெட்,ஓட்டப்பந்தயம் ஆகிய போட்டிகளை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் தொடங்கி வைத்து பரிசுத் தொகை வழங்கினார். உடன் ஆலங்குளம் மத்திய ஒன்றியச் செயலாளர் சேக் முகம்மது உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.





கடலூர் மேற்கு மாவட்ட கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாவட்ட,மாநகர,ஒன்றிய,நகர,பகுதி,பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர், கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் சி.வெ.கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இதில் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ,மாநில மகளிரணி நிர்வாகிகள் ஹெலன்டேவிட்சன்,நாமக்கல் பா.ராணி, குமரி விஜயகுமார்,தமிழரசி ரவிக்குமார், ரேகா பிரியதர்ஷினி, ஆ.மங்கையர்கன்னி, ரத்னா லோகேஸ்வரன் கலந்துக் கொண்டனர். முன்னாள் எம்.எல்.ஏ,கலைச்செல்வன்,நகரமன்றத்தலைவர் க.இராசேந்திரன்,மாவட்ட மகளிர் அணி ஜெயந்தி,இந்துமதி,சுமதிநந்தகோபால் உள்ளிட்ட மகளிரணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### மாநில கழக மகளிர் அணி நிர்வாகிகள் பங்கேற்பு!

# கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன், சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், ஜன.12- கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி ஆலோசனை கூட்டம் நெய்வேலி என்.எல்.சி ,தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி,

தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவரும், மகளிர் அணி செயலாளருமான குமரி விஜயகுமார், டெல்டா மண்டல மகளிரணி பெறுப்பாளர் ரேகா பிரியதர்ஷினி, மகளிர் அணி துணை செயலாளர் அங்கையர்கண்ணி ,மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

கூட்டத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு பேசுகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வருகின்ற 27 ஆம் தேதி நடைபெற உள்ள வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல திமுக மகளிர் அணி மாநாட்டில் கடலூர் மேற்கு மாவட்டத்தை சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றார். கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ, கலைச்செல்வன்,

பண்ருட்டி நகர மன்றத் தலைவர் க.இராசேந்திரன், மாவட்ட மகளிரணி அணி அமைப்பாளர் ஜெயந்தி நடராஜன், துணை அமைப்பாளர் பாக்கியலட்சுமி கல்யாணசுந்தரம்,கவிதா, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் இந்துமதி, பண்ருட்டி தெற்கு ஒன்றிய துணை செயலாளர் சுமதி நந்தகோபால், திட்டக்குடி நகர மகளிர் அணி அமைப்பாளரும், நகர மன்ற உறுப்பினர் செமிளாதேவி சின்னு மற்றும் மகளிர் அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் அமல்! அரசாணை வெளியீடு!

# திராவிட மாடல் ஆட்சி அரசு ஊழியர்களின் பொற்காலம்- முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்க நிறுவனத் தலைவர் எம்.ஜி.செல்வம் அறிக்கை!

சென்னை, ஜன.12- தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்க நிறுவனத் தலைவர் எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரசு அறிவிக்கும் சீரிய திட்டங்களை, கடைக்கோடி மனிதர் வரை கொண்டு சேர்க்கும் ஆட்சி வாகனத்தின் சக்கரங்கள் அரசு ஊழியர்கள் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழக ஆட்சி அமைந்த காலகட்டங்களில் அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு உள்ளிட்ட எண்ணற்ற சலுகைகளை வழங்கி அரசு அலுவலர்களின் வாழ்வாதாரத்தை உன்னத நிலைக்கு கொண்டு சென்றவர் எங்கள் இதய சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள். கழக ஆட்சி அரசு ஊழியர்களுக்கும்; ஆசிரியர்களுக்கும் காவல் அரணாக விளங்கியது.

அரசு ஊழியர்களின் இதயத்தில் ஈட்டி பாய்ச்சிய அ.தி.மு.க. அரசு பழைய பென்சன் திட்டத்தை இரத்து செய்து புதிய பென்சன் திட்டத்தைக் கொண்டு வந்து அரசு ஊழியர்களின் வயிற்றில் அடித்தது. கொரானாவைக் காரணம் காட்டி; ஆண்டாண்டு காலமாக அரசு ஊழியர்கள் அனுபவித்து வந்த பல்வேறு சலுகைகள் அனைத்தையும் ஆணவ போக்கோடு அமாவாசை அடிபொடியாழ்வார் எடப்பாடி அரசு இரத்து செய்தது.

கழக ஆட்சி அமைந்தால் அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டிற்கு வழங்கக்கூடிய பல்லாயிரம் கோடி நிதியினை ஒன்றிய அரசு ஓரவஞ்சனையோடு வழங்காத நிலையிலும்; பொது மக்கள் பெரிதும் பயன் பெறும் பல்வேறு நலத்திட்டங்களை அரசு நிறைவேற்றி வருவதை நாடறியும். நாமறிவோம்.

கடும் நிதி நெருக்கடியிலும் அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் மனம் மகிழும் வண்ணம் பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை முழுமையாக வழங்கக் கூடிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த திராவிட மாடல் ஆட்சியின் ஈடு இணையற்ற நாயகன் தமிழ்நாடு வெல்லும் மாவீரன் முதல்வர் அவர்களுக்கும் நிதியமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்கம் இருகரம் கூப்பி இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

உடனடியாக இந்த ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்திட நேற்று முன்தினம் அரசாணை வெளியிட்டுள்ளது. கருணைமிகு முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 'வெல்லும் பெண்கள்' டெல்டா மண்டல மகளிர் மாநாடு!

# பெருந்திரளாக பெண்களை பங்கேற்க செய்வோம்!

## திருவாரூர் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், ஜன12. தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் நடைபெறும் டெல்டாமண்டல வெல்லும் பெண்கள் மகளிர் மாநாட்டில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கில் மகளிர்கள்

பங்கேற்றும், பங்கேற்க செய்தும் மாநாட்டை வெற்றிபெற செய்வோம் என மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அவர்கள் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அவைத்தலைவர் க.தன்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்திபாஸ்கர், மு.வெங்கடேசன் ,தேர்தல் பார்வையாளர்கள் சௌமியன் வைத்யநாதன், ஜெகவீரபாண்டியன், ராஜா சீனிவாசன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் , துணை முதல்வர் எதிர்கால தமிழ்நாட்டின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படி திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர பகுதிகளில் நடைபெற்ற திராவிட பொங்கல் விளையாட்டுப் போட்டிகளில் வென்றோர்களுக்கான, மாவட்ட அளவிலான போட்டிகளை ஜனவரி 12 மற்றும் 13ஆகிய தேதிகளில் நடத்தி பரிசு, சான்றிதழ், கோப்பைகளை வழங்குவது ,மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அணிகளை மாநில இறுதிப்போட்டிகளுக்கு அனுப்பு வது.

எதிர்வரும் பொங்கல் திருநாளை திராவிட பொங்கலாக அறிவித்து சிறப்பித்த நமது முதல்வர் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வண்ணம் பொங்கல் திருநாளில் வாசலெங்கும் "சமத்துவம் பொங்கட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என கோலமிட்டு சிற ப்பித்து, சிற்சிறு விளை யாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது.

முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உழவர் திருநாள், காணும்பொங்கல் விழாக்களை திராவிட இலக்கியத்தின் வாயிலாக மக்களோடு மகிழ்ச்சியாக கொண்டாடி .LED திரைகள் மூலம் மக்களுக்கு திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொங்கல் சிறப்பு செய்திகளை பொதுமக்களுக்கு கொண்டு செல்வது.

ஜனவரி 26அன்று தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் நடைபெறவுள்ள வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் மாநாட்டில் பெருந்திரளாக பெண்கள் சீருடையுடன் பங்கேற்பது பங்கேற்க செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில , மாவட்ட ,ஒன்றிய ,நகர ,பேரூர் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



திராவிட பொங்கல் திருவிழா முன்னிட்டு வள்ளியூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என எழுதி திராவிட பொங்கல் கோலமிட வேண்டும் என கூறி மகளிர் அணி நிர்வாகிகளுக்கு புடவையும்,நகர,பேரூர்,வார்டு,கிளைக் கழக செயலாளர்கள் ஆகியோர்களுக்கு வேஷ்டி,சட்டை, இனிப்பும் வழங்கினார்.